## கோயம்புத்துர் மாநகராட்சி

**அனுப்புநர்**

**திரு செ.ம.வேலுசாமி, B.A.,D.Com.,B.L.,**
**வணக்கத்திற்குரிய மேயர்**,
கோயம்புத்துர் மாநகராட்சி,

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர்,
நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்துர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்துர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லுார், கோவை தெற்கு,
கோவை வடக்கு, தொண்டாமுத்துார்
கவுண்டம்பாளையம், கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை , மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 1570 / 2014 / எம்சி. 8 நாள் : 24.02.2014**

**அய்யா /அம்மா,**

பொருள் : கோயம்புத்துர் மாநகராட்சி - மாமன்ற அவசரக் கூட்டம் நடைபெறுதல் - நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்துர் மாநகராட்சியின் **மாமன்ற அவசரக் கூட்டம் 25.02.2014 செவ்வாய்கிழமை பிற்பகல் 2.45 மணிக்கு** வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும், அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்துர் மாநகராட்சி

/ உண்மை நகல் /

மாமன்ற செயலாளர்

**இணைப்பு : 1**

**நகல் :**

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்துர் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்துர் மாநகராட்சி

# மாமன்ற அவசரக் கூட்டம் - பிப்ரவரி 2014

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்** |
| 1 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண் 61 – வெள்ளலூர் ரோடு தார் சாலை அமைத்தல் பணி – மதிப்பீடு ரூ. 65 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 2 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் -வார்டு எண்.54 - காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் தளம் எண்.1-ல் கடை எண்.I தளம் கடை எண். II-யை வாடகைக்கு ஒதுக்கீடு செய்தல் - உயர்ந்தபட்ச தொகை கோரிய ஏலதாரருக்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 3 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் வார்டு எண்.72 வ.உ.சி பூங்கா அருகில் தரைத்தளத்தில் கடை எண்.2 மற்றும் 8- வாடகைக்கு ஒதுக்கீடு செய்தல் - உயர்ந்தபட்ச தொகை கோரிய ஏலதாரருக்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 4 | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - துடியலூர் வணிக வாளாகம் கடை எண் 24 மற்றும் 44 - மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியது - உயர்ந்தபட்ச தொகை கோரிய ஏலதாரருக்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 5 | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - மருதமலை அடிவாரம் பகுதியில் உள்ள கடைகள் (1 முதல் 5 வரை) – வார்டு எண் 24 மேற்கு ஆரோக்கியசாமி சாலையில் புதியதாக கட்டப்பட்ட கடைகள் - வார்டு எண் 23 – சர்சண்முகம் சாலையில் புதியதாக கட்டப்பட்ட கடைகள் - ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது - உயர்ந்தபட்ச தொகை கோரிய ஏலதாரருக்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 6 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.52 - இராதாகிருஷ்ணன ரோடு – சத்திரோடு புல்மார்க்கெட் மாநகராட்சி வணிக வளாகம் - தரைதளத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள கடைகள் - வாடகை நிர்ணயம் செய்து மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 7 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.80-ல் (எம்.என்.ஜி) மரகார நஞ்சப்பா கவுண்டர் வீதி - மாநகராட்சி வணிக வளாக கடைகள் - தரைதளத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள கடைகள் - வாடகை நிர்ணயம் செய்து மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்வது - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 8 | பொறியியல் பிரிவு - ஐந்து மண்டலங்களிலும் உள்ள பழுதடைந்த சாலைகளை புதுப்பித்தல் பணி – ஒப்பந்தப்புள்ளி கோரியது – உயர்ந்தபட்ச ஏலதாரருக்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 9 | பொறியியல் பிரிவு - ஐந்து மண்டலங்களில் உள்ள மாநகராட்சி பள்ளிகள் மற்றும் நகர்நல மையங்களில் காவலாளிகள், துப்புரவு பணியாளர்கள், குழாய் பொருத்துனர்கள், மின்கம்பியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் ஆகிய பணியாளர்களை கொண்டு ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு தூய்மை பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் மேற்கு, வடக்கு, தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட பொது கழிப்பிடங்களை பராமரித்தல் பணி - ஒப்பந்தப்புள்ளி கோரியது – உயர்ந்தபட்ச ஏலதாரருக்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| 10 | பொறியியல் பிரிவு - வார்டு எண்.13 –ஆர்.கே நாயுடு லே அவுட் முதல் கோவில் மேடு தெக்கலூர் சாலை வரை விவசாய கல்லூரி வளாகத்தில் குழாய் வடிகால் அமைத்தல் – ஒப்பந்தப்புள்ளி கோரியது – உயர்ந்தபட்ச ஏலதாரருக்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 11 | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 55க்கு உட்பட்ட பாப்பநாயக்கன் பாளையம் பகுதியில் உள்ள நவீன கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் - ஒப்பந்தப் புள்ளி கோரியது - உயர்ந்தபட்ச தொகை கோரிய ஏலதாரருக்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 12 | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - கவுண்டம்பாளையம் அசோக்நகர் மேல்பகுதி மற்றும் கீழ்பகுதி - ஆண் / பெண் கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் - ஏலஇனத்தில் இருந்து நீக்கம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக தொடர்பாக |
| 13 | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் -– தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் (TNSCB) ஊட்டி அலுவலகத்திற்கு - வார்டு எண்.23 மேற்கு ஆரோக்கியசாமி ரோடு வடக்குபகுதி - கடை எண்.2,3,4,5 ஒதுக்கீடு செய்வது - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 14 | பொறியியல் பிரிவு - வார்டு எண்.85 கோயம்புத்தூரிலிருந்து சுண்டக்காமுத்தூர் செல்லும் சாலையில் நொய்யல் ஆற்றின் குறுக்கே புதியதாக உயர்மட்ட பாலம் கட்டுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 15 | பொறியியல் பிரிவு - சுண்டக்காமுத்தூர் செல்லும் சாலையில் நொய்யல் ஆற்றின் குறுக்கே வட்ட சாலை மேம்பாடு செய்தல் பணி – மதிப்பீடு 1275 இலட்சம் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 16 | பொறியியல் பிரிவு - மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் 50KW Power Plant அமைத்து சூரிய சக்தி மின்சாரம் உற்பத்தி செய்தல் - விருப்ப கேட்பு அறிக்கை பெறப்பட்டது – விலைப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 17 | பொறியியல் பிரிவு - திடக்கழிவு மேலாண்மை திட்டம் - குப்பையில்லா தூய்மை நகரங்களுக்கான தூய்மை திட்டத்தின் கீழ் மாநகராட்சியின் அனைத்து வார்டுகளிலும் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளுதல் பணி – விருப்ப கேட்பு அறிக்கை பெறப்பட்டது – விலைப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 18 | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண்.64 - சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் உள்ள பொருள் பாதுகாப்பு அறை கட்டணம் வசூலிக்கும் உரிமம் - உயர்ந்தபட்ச ஏலதாரருக்கு ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 19 | பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – 27.03.2014 முதல் 29.03.2014 முடிய "Earth Hour City Challenge 2014" அமைப்பினரால் நடத்தப்பட கருத்தரங்கில் ஆணையாளர் அவர்கள் கலந்து கொள்வதற்கான செலவினங்கள் – WWF அமைப்பினரால் ஏற்றுக் கொள்ளும் கடித வரைவினை அரசிற்கு அனுப்புதல் – மாமன்ற அனுமதி வேண்டுதல் தொடர்பாக. |
| 20 | பணியமைப்பு–கோயம்புத்தூர் மாநகராட்சி – திரு. எஸ். ஜான்சன், உதவிப் பொறியாளர், சென்னை மாநகராட்சி – கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ஒருவழி மாறுதல் கோருதல் – மாமன்ற அனுமதி வேண்டுதல் தொடர்பாக. |
| 21 | Jnnurm – கோயம்புத்தூர் மாநகராட்சியில் விரைவு பேருந்து போக்குவரத்து முறை (Bus Rapid Transport System) திட்டம் செயல்படுத்துதல் - விரிவாக திட்ட அறிக்கை தயாரிக்க தேவையான நிதியுதவி பெற நடடிக்கை எடுத்ததற்கும் மேல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் ஒப்புதல் பெறுதல் மேலும் மாநகராட்சியின் 20 சதவீத பங்குத்தொகையான ரூ. 50.67 இலட்சத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு மேற்கொள்ளுதல்- மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 22 | பொறியியல் பிரிவு - மாநகராட்சி பொது பண்டக சாலையில் உள்ள பழைய பொருள்களை ஏலம் மூலம் உயர்ந்தபட்ச தொகை கோரியவர்களுக்கு ஒப்படைத்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| 23 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண் 71 – காமராஜர் சாலை மாநகராட்சி வணிக வளாக கடைகள் 1 , 2- வாடகை நிர்ணயம் செய்து மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்வது - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 24 | பொறியியல் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் பயோ மீத்தேன் நிலையம் 6 இடங்களில் அமைத்தல் - பாபா அணு ஆராட்சி மையம் மூலம் திட்ட அறிக்கை தயாரித்து அமுல்படுத்த தேவையான நடவடிக்கை எடுத்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 25 | பொறியியல் பிரிவு - திடகழிவு மேலாண்மை சூன்யா திட்டத்தின் கீழ் தற்போது வரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் - மாமன்றத்தின் பார்வைக்கு சமர்பித்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 26 | பொறியியல் பிரிவு – தற்போது உள்ள பழைய 60 வார்டு பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள தெருவிளக்குகளில் பழுதடைந்து மாற்றப்பட வேண்டிய நிலையில் உள்ள சோடியம் ஆவி விளக்குகள் மற்றும் குழல் விளக்குகளுக்கு பதிலாக புதிய LED விளக்குகள் மாற்றியமைக்க நிர்வாக அனுமதி வேண்டுதல் தொடர்பாக |
| 27 | நகரமைப்பு – வடக்கு மண்டலம் – வார்டு எண்.41க்கு உட்பட்ட பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் அமைக்கப்பட்ட காந்திமாநகர் மனைப்பிரிவில் சமுதாய கூடம் மற்றும் இடத்தினை கிரயம் பெறும் வரை வாடகை செலுத்துவதற்கும், மாநகராட்சி பராமரிப்பதற்கும் அரசுக்கு பிரேரணை அனுப்புதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 28 | வருவாய் பிரிவு – கிழக்கு மண்டலம் - வார்டு எண் 67 – மாநகராட்சி மருதூர் திருமண மண்டபம் பராமரிப்பு - சுயஉதவிக்குழுவிற்கு ஒப்படைப்பு செய்தல்- மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |

**நன்றியுரை**

**அ) <u>திருக்குறள்</u>**

ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்

இழுக்கார் குடிப்பிறந் தார்.

(952)

<u>விளக்கம்</u>

வாழ்வில் ஒழுக்கமான நடைமுறை, உண்மையைப் பேணுதல், பழிக்கு நாணுதல் போன்ற பண்புகளுக்கு இழுக்கு வராமல் காத்தல் நல்ல சமுதாய குடிப்பெருமையின் வெளிப்பாடு.

**திருவள்ளுவர்.**

---

ஆ) **<u>தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி</u>**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

## பொருள் எண் 1

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வாா்டு எண் 61 வெள்ளலூா் ரோடு தாா் சாலை அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ. 65,00,000- க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியின் அவசரத்தை கருதி நிா்வாக அனுமதி வேண்டி மாமன்ற கூட்டத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண் 1509/2014/ எம்.டி. 3

**மாநகர மன்ற தீா்மானம் எண் 429 நாள் 25.02.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 2

| | |
|---|---|
| பொருள | கோயம்புத்தூா் மாநகராட்சி மத்திய மண்டலம் வாா்டு எண்.54 காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் தளம் எண்.1-ல் கடை எண்.I தைளம் கடை எண். II-யை வாடகைக்கு ஒதுக்கீடு செய்வது – தொடா்பாக |
| பாா்வை | ஆணையாளா் அவா்களின் உத்திரவு நாள். 24 .02.2014. |

------

கோயம்புத்தூா் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ்காணும் மாதவாடகை கடைகளுக்கு 20.02.2014-ம் தேதி மறுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

| வ.எண் | இனம் | 06.02.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயா்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரா் பெயா் | 20.02.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயா்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரா் பெயா |
|---|---|---|---|
| 1 | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் வாா்டு எண்.54, தளம் எண்.1-ல் கடை எண்.I (263 சதுரடி) அரசுநிா்ணய மதிப்பீடு ரூ.16,766/– | ரூ.9,720/- திரு.S.தா்மராஜ் (ஒப்பந்தப்புள்ளி) | ரூ.9,900/- திரு.N.ரகோத்தமன் (ஒப்பந்தப்புள்ளி) |

மேற்படி இனத்திற்கு ஐந்தாவது முறை 20.02.2014 நடை பெற்ற ஏலத்தில் அரசு மதிப்பு ரூ.16,766/- காட்டிலும் குறைவாக ரூ.9,900/-க்கு திரு.N.ரகோத்தமன் அவா்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | இனம் | 06.02.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயா்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரா் பெயா் |
|---|---|---|
| 2 | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் வாா்டு எண்.54, தளம் எண்.1-ல் கடை எண்.II (263 சதுரடி) அரசுநிா்ணய மதிப்பீடு ரூ.16,766/– | ரூ.8,550/- திரு.S.தா்மராஜ் (ஒப்பந்தப்புள்ளி) |

மேற்படி இனத்திற்கு இதுவரை ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஐந்தாவது முறை 20.02.2014 நடை பெற்ற ஏலத்தில் அரசு மதிப்பு ரூ.16,766/- காட்டிலும் குறைவாக ரூ.8,550/-க்கு திரு.S.தா்மராஜ் அவா்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

மாநகராட்சிக்கு ஏற்படும் நிதி இழப்பினை தவிா்க்கும் பொருட்டு வரிசை எண்.1 மற்றும் 2-ல் உள்ள கடைகளை ஒப்படைக்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் முன்அனுமதி பெற்று மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண்.4363/13/அ1(ம)

**மாநகர மன்ற தீா்மானம் எண் 430 நாள் 25.02.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 3

| | |
|---|---|
| பொருள்- | கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண்.72 வ.உ.சி பூங்கா அருகில் தரைத்தளத்தில் கடை எண்.2 மற்றும் 8-யை வாடகைக்கு ஒதுக்கீடு செய்வது – தொடர்பாக |
| பார்வை- | ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள். 24 .02.2014. |

------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ்காணும் மாதவாடகை கடைகளுக்கு 20.02.2014-ம் தேதி மறுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

| வ. எண் | இனம் | 10.01.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் | 20.02.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.72-ல் வ.உ.சி பூங்கா அருகில் தரைத் தளத்தில் (160சதுரடி) கடை எண்.2 அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.26,500/– | ரூ.26,050/- திரு.A.சிவக்குமார் (மின் ஏலம்) | ரூ.26,550/- திரு.A.சிவக்குமார் (மின் ஏலம்) |
| 2 | வார்டு எண்.72-ல் வ.உ.சி பூங்கா அருகில் தரைத்தளத்தில் (160சதுரடி) கடை எண்.8 அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.34,750/– | ரூ.34,750/- திரு.P.ராஜ சேகர் (ஒப்பந்தப்புள்ளி) | ரூ.37,055/- திரு.P.ராஜ சேகர் (மின் ஏலம்) |

மேற்படி இனத்திற்கு ஆறாவது முறை 20.02.2014 அன்று நடைபெற்ற ஏலத்தில் கடை எண்.2 மற்றும் கடை எண். 8-க்கு அரசு நிர்ணய மதிப்பீடு தொகையை காட்டிலும் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. எனவே இக்கடை ஒப்படைக்க வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுவின் முன்அனுமதி பெற்று மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண்.4363/13/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 431 நாள் 25.02.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 4

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் - துடியலூர் வணிக வாளாகம் கடை எண் 24 மற்றும் 44 ஆகியவற்றிற்கு ஆறாவது முறையாக நடைபெற்ற மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி - தொடர்பாக

*********

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வரியில்லா இனங்களான துடியலூர் பழைய வணிக வளாகக் கடைகளில் காலியாக உள்ள கடை எண் 24 மற்றும் 44 ஆகிய இரண்டு கடைகளுக்கு 20.02.2014 ம் தேதியில் ஆறாவது முறையாக நடைபெற்ற மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கடை எண் 24 க்கு மட்டும் ஏல வைப்பு தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டனர். இதில் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு ஏல கோரிக்கை பெறப்பட்டுள்ளது.

கடை எண் 24 (அரசு மதிப்பு ரூ.5120/- கடையின் அளவு 10 X 16)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 20.02.2014 ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | திரு.வி.சரவணன் | ரூ.5200/- |

மேற்படி கடைக்கு அரசு மதிப்பினை காட்டிலும் கூடுதலாக ரூ.5200/- க்கு ஏலம் கோரப்பட்டுள்ளது. இப்பொருளின் அவசர அவசியத்தை கருதி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 1780/2012/ அ1 (வ)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 432 நாள் 25.02.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 5

| | |
|---|---|
| பொருள்- | கோயம்புத்தூர் மாநகராட்சி - மேற்கு மண்டலம் - மாதாந்திர வாடகை இனங்களுக்கான 2014-17-க்கான - பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 20.02.2014-ல் நடைபெற்றது - ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது - தொடர்பாக |
| பார்வை- | பொதுமறுமின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்ற நாள்.20.02.2014. |

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், 2014-17 மாதாந்திர வாடகை இனங்களுக்கான பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 20.02.2014-ம் தேதியன்று நடைபெற்றது. இதில் உயர்ந்தபட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிக்கைகள் வரப்பெற்ற விபரங்கள் கீழ்கண்டவாறு

ஏலம் நடைபெற்ற தேதி – 20.02.2014

வணிகவளாக கடைகள்

| வ. எண் | வணிகவளாகங்கள் | அரசு நிர்ணயத் தொகை | ஏலதாரர் பெயர் | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை | ஒப்பந்தப் புள்ளி தொகை | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1. | மருதமலை அடிவாரம் பகுதியில் 180 சதுரடி அளவுள்ள கடைகள் (கடை எண் 1. முதல் 5 வரை) தனித்தனியாக | | | | | |
| | கடை எண்.1 | 6400 | R.ஞானவேல் | 7000 | 6750 | 7000 |
| | கடை எண்.2 | 6400 | அமர்சிங் | - | 6700 | 6700 |

| வ. எண் | வணிக வளாகங்கள் | அரசு நிர்ணயத் தொகை தொகை | ஏலதாரர் பெயர் | 1-வது ஏலம் | 2-வது ஏலம் | 3& 4 வது ஏலம் | 5-வது ஏலம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை (ரூ.) | ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) |
| 2. | வார்டு எண். 24ல் மேற்கு ஆரோக்கியசாமி சாலையில் தெற்கு பகுதியில் புதிதாக கட்டப்பட்ட (கடை எண். 1-7, 11-20, 22-36) (10 x 16 =160 சதுரடி அளவுள்ள கடைகள் தனித்தனியாக) | | | | | | | | |
| | கடை எண்.14 | 9000 | V.P.பாரதிராஜா | - | - | - | 9500 | 9500 | 9500 |
| | கடை எண்.16 | 9000 | ஞானேந்தர பிரதாப்சிங்<br>ராமகிருஷ்ணாசிங் | -<br>- | -<br>- | -<br>- | -<br>- | 9250<br>8600 | 9250 |
| | கடை எண்.22 | 9000 | A.சௌந்தர்ராஜன் | - | - | - | - | 9500 | 9500 |
| | கடை எண்.23 | 9000 | R.அய்யம்மாள் | - | - | - | - | 9500 | 9500 |

| வ. எண் | வணிக வளாகங்கள் | அரசு நிர்ணயத் தொகை தொகை | ஏலதாரர் பெயர் | முதல் ஏலம் | 2-வது ஏலம் | 3 & 4-வது ஏலம் | 5-வது ஏலம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை (ரூ.) | ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) |
| 3. | வார்டு எண். 23ல் சர்சண்முகம் சாலையில் புதிதாக கட்டப்பட்ட கடை எண்.1 முதல் 11 வரையுள்ள (10x16=160 சதுரடி அளவுள்ள கடைகள் தனித்தனியாக) | | | | | | | | |
| | கடை எண்.1. | 14999 | ஜமீஸ் அலி | - | - | 14999 | ஒருவரும் கலந்துகொள்ள வில்லை | | 14999 |
| | கடை எண்.10 | 13999 | P.ரமேஷ் | - | 13900 | 13999 | ஒருவரும் கலந்துகொள்ள வில்லை | | 13999 |
| | கடை எண்.11 | 18500 | ராமகிருஷ்ணாசிங்<br>D.மணிகண்டன் | -<br>- | -<br>- | 18500<br>18500 | 19600<br>- | 11250 | 19600 |

வரிசை எண்.1-ல் உள்ள இனத்திற்கு 20.02.2014-ம் தேதி நடைபெற்ற ஏலத்தில் கடை எண்.1-ற்கு அரசு மதிப்பு ரூ.6400/-ஐ விட உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.7000/-ற்கு திரு.R.ஞானவேல் என்பவர் மின்ஏலம் கோரியுள்ளார். எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

வரிசை எண்.1-ல் உள்ள இனத்திற்கு 20.02.2014-ம் தேதி நடைபெற்ற ஏலத்தில் கடை எண்.2-ற்கு அரசு மதிப்பு ரூ.6400/-ஐ விட உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.6700/-ற்கு திரு.அமர்சிங் என்பவர் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

வரிசை எண்.2-ல் உள்ள இனத்திற்கு 20.02.2014-ம் தேதி நடைபெற்ற ஏலத்தில் கடை எண்.14-ற்கு அரசு மதிப்பு ரூ.9000/-ஐ விட உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.9500/-ற்கு திரு.V.P.பாரதிராஜா என்பவர் ஒப்பந்தப்புள்ளி / மின்ஏலம் கோரியுள்ளார். எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

வரிசை எண்.2-ல் உள்ள இனத்திற்கு 20.02.2014-ம் தேதி நடைபெற்ற ஏலத்தில் கடை எண்.16-ற்கு அரசு மதிப்பு ரூ.9000/-ஐ விட உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.9250/-ற்கு திரு..ஞானேந்திர பிரதாப்பசிங் என்பவர் ஒப்பந்தப்புள்ளி / மின்ஏலம் கோரியுள்ளார். எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

வரிசை எண்.2-ல் உள்ள இனத்திற்கு 20.02.2014-ம் தேதி நடைபெற்ற ஏலத்தில் கடை எண்.22-ற்கு அரசு மதிப்பு ரூ.9000/-ஐ விட உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.9500/-ற்கு திரு.சௌந்தர்ராஜன் என்பவர் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

வரிசை எண்.2-ல் உள்ள இனத்திற்கு 20.02.2014-ம் தேதி நடைபெற்ற ஏலத்தில் கடை எண்.23-ற்கு அரசு மதிப்பு ரூ.9000/-ஐ விட உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.9500/-ற்கு திரு.R.அய்யம்மாள் என்பவர் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

வரிசை எண்.3-ல் கடை எண்.1-ல்உள்ள இனத்திற்கு 20.02.2014-ம் தேதி நடைபெற்ற 5-வது ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. ஆனால் 6.2.2014-ல் நடைபெற்ற 4-வது ஏலத்தில் கடை எண்.1-ற்கு அரசு மதிப்பு ரூ.14000/-ஐ விட உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.14,999/-ற்கு திரு.ஜமீஸ்அலி என்பவர் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

வரிசை எண்.3-ல் கடை எண்.10-ல் உள்ள இனத்திற்கு 20.02.2014-ம் தேதி நடைபெற்ற 5-வது ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. ஆனால் 6.2.2014-ல் நடைபெற்ற 4-வது ஏலத்தில் கடை எண்.10-ற்கு அரசு மதிப்பு ரூ.11000/-ஐ விட உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.13999/-ற்கு திரு.P.ரமேஷ் என்பவர் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

வரிசை எண்.3-ல் கடை எண்.11-ல் உள்ள இனத்திற்கு 20.02.2014-ம் தேதி நடைபெற்ற 5-வது ஏலத்தில் அரசு மதிப்பு ரூ.18500/-ஐ விட உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.19600/-ற்கு திரு.ராமகிருஷ்ணாசிங் என்பவா் மின்ஏலம் கோரியுள்ளாா். எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

எனவே மேற்படி வணிகவளாகங்களை ஒப்படைப்பு செய்ய அவசர அவசியத்தை கருதி வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவா் அவா்களின் முன்அனுமதி பெற்று மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.12374/2013/அ1(மே)

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 433 நாள் 25.02.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 6

| | |
|---|---|
| பொருள் : | கோயம்புத்தூா் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வாா்டு எண்.52-ல் இராதகிருஷ்ணன ரோடு – சத்திரோடு புல்மாா்க்கெட் மாநகராட்சி வணிக வளாகம் - தரைதளத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள கடைகளை மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்வது - தொடா்பாக. |
| பாா்வை | ஆணையாளா் அவா்களின் உத்திரவு நாள். .02.2014. |

**********

கோயம்புத்தூா் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வாா்டு எண்.52-ல் இராதாகிருஷ்ண ரோடு – சத்திரோடு புல்மாா்க்கெட் மாநகராட்சி வணிக வளாக தரைதளத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள பதினொன்று (11) கடைகளில் கடை எண். 10 மற்றும் 11-யை தவிர மீதமுள்ள ஒன்பது கடைகளை (9 கடைகள்) மின் ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி மூலம் ஒதுக்கீடு செய்ய ஏலம் கோரப்படவேண்டும். பொதுப் பணித்துறை வாடகை மதிப்பின்படி வாடகை நிா்ணயம் செய்திட பொறியாளரின் அறிக்கை கோரப்பட்டு கீழ்கண்டவாறு பொதுப்பணித்துறை வாடகை மதிப்பு நிா்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வணிக வளாகம் அமைந்துள்ள இடம் | மொத்த கடைகள் | கடை ஒன்றிக்கு மொத்த சதுரடி | ஒரு சதுரடிக்கு நிா்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ | மாத வாடகை ரூ |
|---|---|---|---|---|---|
| 1 | வாா்டு எண்.52-ல் இராதாகிருஷ்ன ரோடு – சத்திரோடு புல்மாா்க்கெட் மாநகராட்சி வணிக வளாகம் தரை தளத்தில் கடை எண்.1,2,3,5,6,7,8 மற்றும் 9 | 8 | 10 x11 = 110 | 56.65 | 6,232/- |
| 2 | வாா்டு எண்.52-ல் இராதாகிருஷ்ன ரோடு – சத்திரோடு புல்மாா்க்கெட் மாநகராட்சி வணிக வளாகம் தரை தளத்தில் கடை எண்.4 | 1 | 20.9x11 = 228 | 56.65 | 12,930/- |

மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்ய கீழ்கண்டவாறு வைப்புத்தொகை, காப்புத் தொகை, சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லது வங்கி உறுதி சான்றிதழ் மற்றும் சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லாமல் அதற்கு செலுத்த வேண்டிய தொகை நிா்ணயம் செய்யவும் அதற்கான விளம்பர செலவினங்களை ஏற்கவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவா் மற்றும் வணக்கத்திற்குரிய மேயா் அவா்களின் முன் அனுமதி பெற்று பொது ஏலத்திற்கு சோ்த்துக்கொள்ளப்பட்டதற்கு பின்னேற்பு வேண்டி மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

வைப்புத்தொகை (கடை எண்.1,2,3,5முதல் 9வரை ) -ரூ.75,000/-

காப்புத்தொகை -ரூ.50,000/-

சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லது வங்கி உறுதி சான்றிதழ் -ரூ.1,50,000/-

சொத்து மதிப்பீடு சான்றிதழுக்கு பதிலாக செலுத்த வேண்டிய தொகை
(கடை எண்.1,2,3,5முதல் 9வரை ) -ரூ 50,000/-

வைப்புத்தொகை (கடை எண்.4) -ரூ.1,50,000/-

காப்புத்தொகை -ரூ.50,000/-

சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லது வங்கி உறுதி சான்றிதழ் - ரூ.1,50,000/-
சொத்து மதிப்பீடு சான்றிதழுக்கு பதிலாக செலுத்த வேண்டிய தொகை
(கடை எண்.4 ) -ரூ75,000/-

அலுவலக குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 1949/2014/அ1(ம)

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 434 நாள் 25.02.2014</u>**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

## பொருள் எண் 7

| | |
|---|---|
| பொருள் : | கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.80-ல் (எம்.என்.ஜி) மரகார நஞ்சப்பா கவுண்டர் வீதி - மாநகராட்சி வணிக வளாக கடைகள் - தரைதளத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள கடைகளை மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்வது - தொடர்பாக. |
| பார்வை | ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள். .02.2014. |

**********

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.80-ல் (எம்.என்.ஜி) மரகார நஞ்சப்பா கவுண்டர் வீதி மாநகராட்சி வணிக வளாக கடைகள் தரைதளத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள ஐந்து கடைகளை மின் ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி மூலம் ஒதுக்கீடு செய்ய ஏலம் கோரப்படவேண்டும். பொதுப் பணித்துறை வாடகை மதிப்பின்படி வாடகை நிர்ணயம் செய்திட பொறியாளரின் அறிக்கை கோரப்பட்டு கீழ்கண்டவாறு பொதுப்பணித்துறை வாடகை மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வணிக வளாகம் அமைந்துள்ள இடம் | மொத்த கடைகள் | கடை ஒன்றிக்கு மொத்த சதுரடி | ஒரு சதுரடிக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ | மாத வாடகை ரூ |
|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.80-ல் (எம்.என்.ஜி) மரகார நஞ்சப்பா வீதி மாநகராட்சி வணிக வளாகம் தரை தளத்தில் மாடி படிக்கு கீழ் உள்ள கடை எண்.1 | 1 | 8 x4 = 32 | 86/- | 2,752/- |
| 2 | வார்டு எண்.80-ல் (எம்.என்.ஜி) மரகார நஞ்சப்பா வீதி மாநகராட்சி வணிக வளாகம் தரை தளத்தில் கடை எண்.2. | 1 | 10 x8 = 80 | 86/ | 6,880/- |
| 3 | வார்டு எண்.80-ல் (எம்.என்.ஜி) மரகார நஞ்சப்பா வீதி மாநகராட்சி வணிக வளாகம் தரை தளத்தில் கடை எண்.3. | 1 | 10 x12 = 120 | 86/ | 10,320/- |
| 4 | வார்டு எண்.80-ல் (எம்.என்.ஜி) மரகார நஞ்சப்பா வீதி மாநகராட்சி வணிக வளாகம் தரை தளத்தில் கடை எண்.4. | 1 | 10 x17 = 170 | 86/ | 14,620/- |
| 5 | வார்டு எண்.80-ல் (எம்.என்.ஜி) மரகார நஞ்சப்பா வீதி மாநகராட்சி வணிக வளாகம் தரை தளத்தில் கடை எண்.5. | 1 | 10 x17 = 170 | 86/ | 14,620/- |

மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்ய கீழ்கண்டவாறு வைப்புத்தொகை, காப்புத் தொகை, சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லது வங்கி உறுதி சான்றிதழ் மற்றும் சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லாமல் அதற்கு செலுத்த வேண்டிய தொகை நிர்ணயம் செய்யவும் அதற்கான விளம்பர செலவினங்களை ஏற்கவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவர் மற்றும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பொது ஏலத்திற்கு சேர்த்துக்கொள்ளப்பட்டதற்கு பின்னேற்பு வேண்டி மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

வைப்புத்தொகை (கடை எண்.1 ) -ரூ.50,000/-

வைப்புத்தொகை (கடை எண்.2) -ரூ.75,000/-
வைப்புத்தொகை (கடை எண்.3 முதல்5 வரை) -ரூ.1,00,000/-

காப்புத்தொகை -ரூ.50,000/-

சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லது
வங்கி உறுதி சான்றிதழ் -ரூ.1,50,000/-

சொத்து மதிப்பீடு சான்றிதழுக்கு பதிலாக
செலுத்த வேண்டிய தொகை -ரூ 50,000/-
அலுவலக குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 1359/2014/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 435 நாள் 25.02.2014**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

## பொருள் எண் 8

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ் கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 509/ 2014/ எம்.டி.2 | கிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள சாலைகளில் பழுதடைந்த சாலைகளை செப்பனிடுதல் | 18.00 | 21.02.2014 முதலாம் அழைப்பு | 1.தி/ள். எம்.எஸ். இன்ஜினியர்ஸ் கோயம்புத்தூர் 1.34 % அதிகம்<br><br>2.தி/ள்.விஸ்ணு இன்ப்ரா ஸ்டிரக்சர்ஸ் கோயம்புத்தூர் 0.10% குறைவு | தி/ள்.விஸ்ணு இன்ப்ரா ஸ்டிரக்சர்ஸ் கோயம்புத்தூர் 0.10% குறைவு |
| 2 | 509/ 2014/ எம்.டி.2 | வடக்கு மண்டலத்திற்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள சாலைகளில் பழுதடைந்த சாலைகளை செப்பனிடுதல் | 18.00 | 21.02.2014 முதலாம் அழைப்பு | 1.தி/ள். எம்.எஸ். இன்ஜினியர்ஸ் கோயம்புத்தூர் 1.34 % அதிகம்<br><br>2.திரு.சி.கே.சுந்தரம் கோயம்புத்தூர் 0.10% குறைவு | திரு.சி.கே.சுந்தரம் கோயம்புத்தூர் 0.10% குறைவு |
| 3 | 509/ 2014/ எம்.டி.2 | மேற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலைகளில் பழுதடைந்த சாலைகளை செப்பனிடுதல் | 18.00 | 21.02.2014 முதலாம் அழைப்பு | 1.திரு.ஆர்.மயில்வாணன் கோயம்புத்தூர் 2.79% அதிகம்<br><br>2..திரு.ஏ.ராஜு கோயம்புத்தூர் 0.32% குறைவு | திரு.ஏ.ராஜு கோயம்புத்தூர் 0.32% குறைவு |
| 4 | 509/ 2014/ எம்.டி.2 | தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலைகளில் பழுதடைந்த சாலைகளை செப்பனிடுதல் | 18.00 | 21.02.2014 முதலாம் அழைப்பு | 1.திரு.எம்.ராஜேந்திரன் கோயம்புத்தூர் 0.49 % அதிகம்<br><br>2.தி/ள். பி.செந்தில் அன் கோ கோயம்புத்தூர் 0.10% குறைவு | தி/ள். பி.செந்தில் அன் கோ கோயம்புத்தூர் 0.10% குறைவு |
| 5 | 509/ 2014/ எம்.டி.2 | மத்திய மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலைகளில் பழுதடைந்த சாலைகளை செப்பனிடுதல் | 26.50 | 21.02.2014 முதலாம் அழைப்பு | 1.தி/ள். எம்.எஸ். இன்ஜினியர்ஸ் கோயம்புத்தூர் 5.00 % குறைவு<br><br>2.தி/ள்.விஸ்ணு இன்ப்ரா ஸ்டிரக்சர்ஸ் கோயம்புத்தூர் 1.94% அதிகம் | தி/ள். எம்.எஸ். இன்ஜினியர்ஸ் கோயம்புத்தூர் 5.00 % குறைவு |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண். 509 /2014/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 436 நாள் 25.02.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 9

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் கீழ்கண்டுள்ள பள்ளிகளில் காவலாளிகள், துப்புரவு பணியாளர்கள், குழாய் பொருத்துனர்கள், மின்கம்பியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் ஆகிய பணியாளர்களை கொண்டு ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு தூய்மை பணிகள் மேற்கொள்ளுதல் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ் கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 10764/ 2013/எம்.டி.5 | கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்.11,13,14,15,20,21,22,23,24 க்குட்பட்ட மாநகராட்சி ஆரம்ப பள்ளிகளில் காவலாளிகள், துப்புரவு பணியாளர்கள், குழாய் பொருத்துனர்கள், மின்கம்பியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் ஆகிய பணியாளர்களை கொண்டு ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு தூய்மை பணிகள் மேற்கொள்ளுதல் | 49.95 | 23.01.2014 முதலாம் அழைப்பு | 1.தி/ள். எம்.எஸ். இன்ஜினியர்ஸ் கோயம்புத்தூர் 9.50 % அதிகம் | தி/ள். எம்.எஸ். இன்ஜினியர்ஸ் கோயம்புத்தூர் 4.94 % அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 2 | 10763/ 2013/எம்.டி.5 | கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்.13,23,24 க்குட்பட்ட மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல் நிலைப் பள்ளிகளில் காவலாளிகள், துப்புரவு பணியாளர்கள், குழாய் பொருத்துனர்கள், மின்கம்பியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் ஆகிய பணியாளர்களை கொண்டு ஒரு வருட காலத்திற்கு தூய்மை பணிகள் மேற்கொள்ளுதல் | 49.70 | 23.01.2014 முதலாம் அழைப்பு | 1.தி/ள். எம்.எஸ். இன்ஜினியர்ஸ் கோயம்புத்தூர் 6.75 % அதிகம் | தி/ள். எம்.எஸ். இன்ஜினியர்ஸ் கோயம்புத்தூர் 3.73 % அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 3 | 5876/2013/எம்.டி.5 | கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல் நிலைப் பள்ளிகளில் காவலாளிகள், துப்புரவு பணியாளர்கள், குழாய் பொருத்துனர்கள், மின்கம்பியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் ஆகிய பணியாளர்களை கொண்டு ஒரு வருட காலத்திற்கு தூய்மை பணிகள் மேற்கொள்ளுதல் | 26.50 | 23.01.2014 முதலாம் அழைப்பு | 1.தி/ள். சானிட்ஸ் டெக்னாலஜிஸ் கோயம்புத்தூர் 5.01 % அதிகம்<br><br>2.தி/ள்.கே.சி.பி இன்ஜினியர்ஸ் பி லிட் கோயம்புத்தூர் 10.03% அதிகம் | தி/ள். சானிட்ஸ் டெக்னாலஜிஸ் கோயம்புத்தூர் 3.61 % அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 4 | 9981/2013/எம்.டி.5 | கோவை மாநகராட்சி மத்திய மற்றும் கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட நகர் நல மையங்களில் காவலர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்கள் போன்ற பணியாளர்களை கொண்டு ஒரு வருட காலத்திற்கு தூய்மை பணிகள் மேற்கொள்ளுதல் | 42.60 | 23.01.2014 முதலாம் அழைப்பு | 1.தி/ள். சானிட்ஸ் டெக்னாலஜிஸ் கோயம்புத்தூர் 5.01 % அதிகம்<br>2.தி/ள்.கே.சி.பி இன்ஜினியர்ஸ் பி லிட் கோயம்புத்தூர் 10.05% அதிகம் | தி/ள். சானிட்ஸ் டெக்னாலஜிஸ் கோயம்புத்தூர் 4.87 % அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5 | 9982/ 2013/ எம்.டி. 5 | கோவை மாநகராட்சி மேற்கு. தெற்கு மற்றும் வடக்கு மண்டலத்திற்குட்பட்ட நகர் நல மையங்களில் காவலர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்கள் போன்ற பணியாளர்களை கொண்டு ஒரு வருட காலத்திற்கு தூய்மை பணிகள் மேற்கொள்ளுதல் | 38.50 | 23.01.2014 முதலாம் அழைப்பு | 1.தி/ள். சானிட்ஸ் டெக்னாலஜிஸ் கோயம்புத்தூர் 4.99 % அதிகம் 2.தி/ள்.கே.சி.பி இன்ஜினியர்ஸ் பி லிட் கோயம்புத்தூர் 10.00% அதிகம் | தி/ள். சானிட்ஸ் டெக்னாலஜிஸ் கோயம்புத்தூர் 4.40 % அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 6 | 11964/ 2013/ எம்.டி. 5 | கோவை மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட 32 பொது கழிப்பிடங்களை தனியார் மூலம் தினமும் சுத்தம் செய்து பராமரித்தல் | 36.90 | 23.01.2014 முதலாம் அழைப்பு | 1.தி/ள். சானிட்ஸ் டெக்னாலஜிஸ் கோயம்புத்தூர் 0.12 ரூ குறைவு 2.தி/ள். மைக்ரோ ப்யூர் டெக்னாலஜிஸ் கோயம்புத்தூர் 0.01ரூ குறைவு | தி/ள். சானிட்ஸ் டெக்னாலஜிஸ் கோயம்புத்தூர் 0.12 ரூ குறைவு |
| 7 | 9795/ 2013/ எம்.டி. 5 | கோவை மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட 36 பொது கழிப்பிடங்களை தனியார் மூலம் தினமும் சுத்தம் செய்து பராமரித்தல் | 36.90 | 23.01.2014 முதலாம் அழைப்பு | 1.தி/ள். சானிட்ஸ் டெக்னாலஜிஸ் கோயம்புத்தூர் 0.08 ரூ குறைவு 2.தி/ள். மைக்ரோ ப்யூர் டெக்னாலஜிஸ் கோயம்புத்தூர் 0.01ரூ குறைவு | தி/ள். சானிட்ஸ் டெக்னாலஜிஸ் கோயம்புத்தூர் 0.08 ரூ குறைவு |
| 8 | 11928/ 2013/ எம்.டி. 5 | கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பொதுக் கழிப்பிடங்களை ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணி செய்தல் | 49.80 | 23.01.2014 முதலாம் அழைப்பு | 1.தி/ள். சானிட்ஸ் டெக்னாலஜிஸ் கோயம்புத்தூர் 0.08 ரூ குறைவு 2.தி/ள். மைக்ரோ ப்யூர் டெக்னாலஜிஸ் கோயம்புத்தூர் 0.01ரூ குறைவு | தி/ள். சானிட்ஸ் டெக்னாலஜிஸ் கோயம்புத்தூர் 0.08 ரூ குறைவு |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- இப்பணிகளுக்கு குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தால் இப்பணிகளுக்கு மதிப்பீட்டை விட அதிகமாக கூடுதல் சதவீதம் பெறப்பட்ட விலைப்புள்ளிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் மேற்படி பணிகளுக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம்

ந.க.எண். 10764 /2013/எம்.டி.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 437 நாள் 25.02.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 10

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ் கண்டவாறு பணியினை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 5 | 11803/ 2013/ எம்.டி.2 | வார்டு எண்.13 ஆர்.கே நாயுடு லே அவுட் முதல் கோவில் மேடு தெக்கலூர் சாலை வரை விவசாய கல்லூரி வளாகத்தில் குழாய் வடிகால் அமைத்தல் | 72.50 | 19.02.2014 முதலாம் அழைப்பு | 1.திரு.ஆர்.மயில்வாணன் கோயம்புத்தூர் 0.21% குறைவு<br><br>2..திரு.அம்மாசையப்பன் கோயம்புத்தூர் 1.06% அதிகம் | திரு.ஆர்.மயில்வாணன் கோயம்புத்தூர் 0.21% குறைவு |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண். 11803 /2013/எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 438 நாள் 25.02.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 11

பொருள் : வடக்கு மண்டலம் - கோயம்புத்தூர் மாநகராட்சி - வார்டு எண் 55க்கு உட்பட்ட பாப்பநாயக்கன் பாளையம் பகுதியில் உள்ள நவீன கட்டண கழிப்பிடத்தில் 2014 – 2017 ம் ஆண்டிற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு நடைபெற்ற பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி – தொடர்பாக

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 55க்கு உட்பட்ட பாப்பநாயக்கன் பாளையம் பகுதியில் உள்ள நவீன கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு 20.02.2014-ம் தேதியில் நான்காவது முறையாக நடைபெற்ற பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கீழ் குறிப்பிட்டுள்ளவாறு ஏலக் கோரிக்கை பெறப்பட்டுள்ளது.

அரசு மதிப்பு ரூ.200000/- (2013-2014 ஆண்டு உரிமைத்தொகை )

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 29.01.2014 ம் தேதிய மின் ஏலக்கோரிக்கை | 20.02.2014 ம் தேதிய மின் ஏலக்கோரிக்கை |
|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.பாண்டியன் | - | ரூ.124000/- |
| 2 | திரு.சி.செல்வம் | ரூ.160000/- | ரூ.189000/- |

மேற்படி இனமானது 2013-2014 ஆம் ஆண்டினைக் காட்டிலும் கூடுதலாக ஏலம் கோரப்பட்டுள்ளது. இப்பொருளின் அவசர அவசியத்தை கருதி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு முன்அனுமதி பெற்று மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 1180/12/அ1 (வ)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 439 நாள் 25.02.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 12

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் - வருடாந்திர குத்தகை இனங்கள் 2014-17-க்கான - பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 20.02.2014-ல் நடைபெற்றது - ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது - வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு முன்அனுமதி பெற்று மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

பார்வை: பொதுமறுமின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்ற நாள்.20.02.2014.

*****

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், 2014-17 வருடாந்திர குத்தகை இனங்களுக்கான பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 20.02.2014-ம் தேதியன்று நடைபெற்றது. இதில் உயர்ந்தபட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிக்கைகள் வரப்பெற்ற விபரங்கள் கீழ்கண்டவாறு

ஏலம் நடைபெற்ற தேதி – 20.02.2014

குத்தகை இனங்கள்

| வ. எண் | குத்தகை இனங்கள் | கடந்த வருட ஏலத் தொகை யில் 5% நிர்ணயம் செய்யப் பட்ட தொகை (ரூ) | ஏலதாரர் பெயர் | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை | உயர்ந்த பட்ச ஏலத் தொகை தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1. | கவுண்டம்பாளையம் அசோக்நகர் மேல்பகுதி ஆண் / பெண் கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 2018 | ஒருவரும் கலந்துகொள்ளவில்லை | | | |
| 2. | கவுண்டம்பாளையம் அசோக்நகர் கீழ்பகுதி பெண்கள் கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 3473 | ஒருவரும் கலந்துகொள்ளவில்லை | | | |

குத்தகை இனங்கள்

வரிசை எண்.1-2-ல் உள்ள இனத்திற்கு அரசு நிர்ணயத்தொகை வருடாந்திரத்திற்கு குறைவாக உள்ளது. மேற்படி இனத்திற்கு மூன்று முறை ஏலம் விடப்பட்டும் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. மேலும் அடித்தட்டு மக்கள் வசிக்கும் பகுதியாக உள்ளதால் மாநகராட்சி பணியாளர்களை கொண்டு துறை வாரியான வசூல் மேற்கொள்ளும்பொழுது அதில் வரும் வருமானம் குறைவாக வர வாய்ப்புள்ளதாலும், இது மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதாலும், பொதுமக்கள் நலன்கருதி பொது கழிப்பிடமாக பயன்படுத்த ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களை கொண்டு சுத்தம் செய்து பொதுமக்கள் பயன்படுத்தவும், மேற்படி இனத்தை ஏலஇனத்திலிருந்து நீக்கம் செய்ய அவசர அவசியத்தை கருதி வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.12374/2013/அ1(மே)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 440 நாள் 25.02.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 13

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் -– தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் (TNSCB) ஊட்டி அலுவலகத்திற்கு - வார்டு எண்.23 மேற்கு ஆரோக்கியசாமி ரோடு வடக்குபகுதி - கடை எண்.2,3,4,5 ஒதுக்கீடு செய்வது - தொடர்பாக.

பார்வை: TNSCB / Lr.No.0027 /AEE / 12 / Dt.05.09.2013

****

பார்வையில் காணும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் (TNSCB) ஊட்டி அவர்களின் தங்களது கடிதத்தில் வார்டு எண்.23 ஆர்.எஸ்.புரம் மேற்கு ஆரோக்கியசாமி ரோட்டில் புதிதாக கட்டியுள்ள ஆரோக்கியசாமி ரோடு தெற்கு பகுதியில் வடக்கு பார்த்த கடைகளில் 4 கடைகளை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் (TNSCB) ஊட்டி அலுவலகத்திற்கு ஒதுக்கிதர கோரியுள்ளார்.

வார்டு எண்.23, ஆர்.எஸ்.புரம், மேற்கு ஆரோக்கியசாமி ரோடு தெற்கு பகுதியில் புதிதாக கட்டியுள்ள் வடக்கு பார்த்த கடைகள் ஏற்கனவே ஏலம் விடப்பட்டு ஏலதாரரிடம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கு ஆரோக்கியசாமி ரோடு வடக்கு பகுதியில் கட்டியுள்ள கடைகள் ஐந்து முறை ஏலம் விடப்பட்டு அதில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை.

எனவே மேற்கு ஆரோக்கிசாமிரோடு வடக்கு பகுதியில் கட்டியுள்ள கடை எண்கள்.2 முதல் 5 வரை உள்ள கடைகளை தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் (TNSCB) ஊட்டி அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.10730/2013/அ1(மே)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 441 நாள் 25.02.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 14

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ் கண்டவாறு பணியினை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 5162/ 2011/ எம்.டி.4 | வார்டு எண். 85 கோயம்புத்தூரிலிருந்து சுண்டக்காமுத்தூர் செல்லும் சாலையில் நொய்யல் ஆற்றின் குறுக்கே புதியதாக உயர்மட்ட பாலம் கட்டுதல் | 225.00 | **19.02.2014** முதலாம் **அழை** | 1.தி/ள். கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பிலிட், கோயம்புத்தூர் 4.94% அதிகம்<br>2.தி/ள்.பிரத்தீன் இன்ப்ராஸ்ரக்ச்சர் கோயம்புத்தூர் 42.94%அதிகம் | தி/ள். கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பிலிட், கோயம்புத்தூர் 4.94% அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- இப்பணிகளுக்கு குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தால் இப்பணிகளுக்கு மதிப்பீட்டை விட அதிகமாக கூடுதல் சதவீதம் பெறப்பட்ட விலைப்புள்ளிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் மேற்படி பணிகளுக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம்

ந.க.எண். 5162 /2011/எம்.டி.4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 442 நாள் 25.02.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 15

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ் கண்டவாறு பணியினை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 5162/ 2011/ எம்.டி.4 | கோயம்புத்தூர் மாநகராட்சி சுண்டக்காமுத்தூர் செல்லும் சாலையில் நொய்யல் ஆற்றின் குறுக்கே வட்ட சாலை மேம்பாடு செய்தல் பணி | 1275.00 | 19.02.2014 முதலாம் அழைப்பு | 1.தி/ள். கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பிலிட், கோயம்புத்தூர் 4.97% அதிகம்<br><br>2.தி/ள்.ராபர்ட் ராஜா கோயம்புத்தூர் 6.90 %அதிகம் | தி/ள். கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பிலிட், கோயம்புத்தூர் 4.87% அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- இப்பணிகளுக்கு குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தால் இப்பணிகளுக்கு மதிப்பீட்டை விட அதிகமாக கூடுதல் சதவீதம் பெறப்பட்ட விலைப்புள்ளிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் மேற்படி பணிகளுக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம்

ந.க.எண். 5162 /2011/எம்.டி.4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 443 நாள் 25.02.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 16

கோவை மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் 50KW Power Plant அமைத்து சூரிய சக்தி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்து TANGEDCO வின்மூலம் பெறப்படும் மின்சாரத்தின் மின் பயன்பாட்டுச் செலவினைக் குறைக்கும் பொருட்டு அமைக்க MNRE Chennel partners களிடமிருந்து விருப்ப கேட்பு அறிக்கை மூன்றுமுறை கோரப்பட்டது. 29.01.2014 அன்று கோரப்பட்ட மூன்றாவது விருப்ப கேட்பு அறிக்கையில் கீழ்காணும் நான்கு நிறுவனங்கள் தனது விருப்ப கேட்பு அறிக்கையினை சமர்பித்துள்ளனர்.

1. M/S. Nano Bright Solar technologies Pvt Ltd., Hyderabad
2. M/s. Swelect energy systems Limited, Chennai
3. M/s. Millenium Synergy Pvt Ltd, Chennai
4. M/s. Espen Enterprises, Coimbatore

மேற்குறிப்பிட்டுள்ள நிறுவனங்களின் தொழில்நுட்ப தகுதிகளை திறனாய்வு செய்ததில் தி.ள். Espen Enterprises, Coimbatore நிறுவனத்தினர் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளனர். எனவே அந்நிறுவனத்தின் விலைப்புள்ளி 14.02.2014 அன்று திறக்கப்பட்டது. மேலும் இந்நிறுவனத்தார் இப்பணியினை ரூ. 62,24,000/- மதிப்பீட்டில் மேற்கொள்ள விபருப்பம் தெரிவித்துள்ளனர். மேற்காண் தொகையினை விலைக்குறைப்பு செய்துதர கோரியதில் ஏற்கனவே கொடுக்கப்பட்ட விலைப்புள்ளியில் ரூ. 1,24,000/- ஐ குறைத்து இப்பணியினை ரூ. 61,00.000/- மேற்கொள்ள இசைவு தெரிவித்துள்ளனர்.

எனவே இப்பணியினை தி.ள். Espen Enterprises, Coimbatore நிறுவனத்தார் அவர்களுக்கு வழங்கவும், இப்பணியினை ரூ. 61,00,000/- மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.15792/2008/எம்.டி. 4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 444 நாள் 25.02.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 17

| | |
|---|---|
| பொருள் : | கோயம்புத்தூர் மாநகராட்சி – திடக்கழிவு மேலாண்மை திட்டம் - குப்பையில்லா தூய்மை நகரங்களுக்கான தூய்மை திட்டத்தின் கீழ் மாநகராட்சியின் அனைத்து வார்டுகளிலும் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளுதல் பணி – தொடர்பாக. |
| பார்வை | மாமன்றத் தீர்மான எண்.233 நாள் 25-10-2013. |

--------------------

கோயம்புத்தூர் மாநகரை திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் மூலம் குப்பையில்லா தூய்மை நகரங்களுக்கான தூய்மை திட்டத்தின்கீழ் மாநகராட்சியின் அனைத்து வார்டுகளிலும் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளுதல் பணிக்காக கடந்த 30.12.2013ம் தேதி அன்று தகுதி வாய்ந்த வல்லுநர்களை ஒப்பந்தப்புள்ளி மூலம் நியமனம் செய்ய விருப்ப கேட்பு அறிக்கை (Request for Proposal) வரவழைக்கப்பட்டது. அதில் கீழ்க்கண்ட நிறுவனங்கள் கலந்து கொண்டு விலைப்புள்ளி வழங்கியது. அதன் விபரம் கீழ்க்கண்டவாறு.

| **வ. எண்.** | **நிறுவனத்தின் பெயர்** | **நிறுவனம் வழங்கிய விலைப்புள்ளி தொகை (ரூபாயில்)** |
|---|---|---|
| | **கிழக்கு மண்டலம்** | |
| 1 | திரு ஸ்ரீ பாலாஜி அசோசியட்ஸ், சென்னை. | 22,00,000/- |
| 2 | திரு கிளீன் சிட்டீஸ் பவுண்டேசன், விசாகப்பட்டினம் | 21,70,000/- |
| | **மேற்கு மண்டலம்** | |
| 1 | திரு ஸ்ரீ பாலாஜி அசோசியட்ஸ், சென்னை. | 22,00,000/- |
| 2 | திரு கிளீன் சிட்டீஸ் பவுண்டேசன், விசாகப்பட்டினம் | 21,70,000/- |
| | **வடக்கு மண்டலம்** | |
| 1 | திரு ஸ்ரீ பாலாஜி அசோசியட்ஸ், சென்னை. | 22,00,000/- |
| 2 | திரு கிளீன் சிட்டீஸ் பவுண்டேசன், விசாகப்பட்டினம் | 21,70,000/- |
| | **தெற்கு மண்டலம்** | |
| 1 | திரு ஸ்ரீ பாலாஜி அசோசியட்ஸ், சென்னை. | 22,00,000/- |
| 2 | திரு கிளீன் சிட்டீஸ் பவுண்டேசன், விசாகப்பட்டினம் | 21,70,000/- |
| | **மத்திய மண்டலம்** | |
| 1 | திரு ஸ்ரீ பாலாஜி அசோசியட்ஸ், சென்னை. | 22,00,000/- |
| 2 | திரு கிளீன் சிட்டீஸ் பவுண்டேசன், விசாகப்பட்டினம் | 21,70,000/- |

மேற்படி நிறுவனங்கள் வழங்கிய விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியாக ஒவ்வொரு மண்டலத்திற்கும் ரூ21,70,000/- வீதம் வழங்கிய திரு கிளீன் சிட்டீஸ் பவுண்டேசன், விசாகப்பட்டினம் அவர்களது விலைப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது,

அலுவலக குறிப்பு அனுமதிக்கலாம் ந.க.எண். 6088 /2013/ எம்.டி.2.

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 445 நாள் 25.02.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

--------------------------------------------------------------------------------

## பொருள் எண் 18

| | |
|---|---|
| பொருள்- | கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண்.64 சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் உள்ள பொருள் பாதுகாப்பு அறை கட்டணம் வசூலிக்கும் உரிமம் ஒப்படை செய்வது – தொடர்பாக |
| பார்வை- | ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள். 21 .02.2014. |

------

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட கீழ்காணும் சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் உள்ள பொருள் பாதுகாப்பு அறை கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு 2014-2017-ம் ஆண்டிற்கு 20.02.2014-ம் தேதி மறுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

| வ.எண் | ஏலத்தாரா் பெயா் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ | மாநகராட்சி மதிப்பு ரூ. |
|---|---|---|---|
| 1 | திரு.எம்.ரகுராம் | ரூ.34,700/- | ரூ.35,000/- |
| 2 | திரு.எ.சந்திரன் | ரூ.35,501/- | |

மேற்படி இனத்திற்கு மூன்றாவது முறை 20.02.2014 அன்று நடைபெற்ற ஏலத்தில் மேற்குறிப்பிட்ட இரண்டு நபர்கள் கலந்துக்கொண்டு ஒப்பந்தப்புள்ளி பதிவு செய்ததில் திரு.எ.சந்திரன் என்பவா் மாநகராட்சி நிா்ணய மதிப்பீடு தொகையை காட்டிலும் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளாா். எனவே இவ்வினத்தை ஒப்படைக்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவா் அவா்களின் முன்அனுமதி பெற்று மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண்.409/14/அ11(கி)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 446 நாள் 25.02.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 19

பொருள் பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – **27.03.2014** முதல் **29.03.2014** முடிய "Earth Hour City Challenge 2014" அமைப்பினரால் நடத்தப்பட கருத்தரங்கில் ஆணையாளர் அவர்கள் கலந்து கொள்வதற்கான செலவினங்கள் – WWF அமைப்பினரால் ஏற்றுக் கொள்ளும் கடித வரைவினை அரசிற்கு அனுப்புதல் – மாமன்ற அனுமதி வேண்டுதல் தொடர்பாக.

பார்வை
1. Dr. Sejal Worah, Programme Director, WWF, நியுடெல்லி அவர்களின் கடித நாள். **12.02.2014.**
2. மாமன்ற தீர்மான எண்.**419**, நாள்.**17.02.2014.**
3. Dr. Sejal Worah, Programme Director, WWF, நியுடெல்லி அவர்களின் கடித நாள். **24.02.2014.**

---------

பார்வை 1ல் காணும் கடிதத்தில் கனடா நாட்டின் வான்கூவர் நகரத்தில் **27.03.2014** முதல் **29.03.2014** வரை Earth Hour City Challenge 2014 அமைப்பினரால் நடத்தப்பட உள்ள கருத்தரங்கில் வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் ஆணையாளர் அவர்களை கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து பார்வை 2ல் காணும் மாமன்றத் தீர்மானத்தில் மேற்படி கருத்தரங்கில் வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் ஆணையாளர் அவர்கள் கலந்து கொள்ள அரசின் அனுமதி பெற கருத்துரு அனுப்பிவைக்கலாமென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும் பார்வை 1ல் காணும் கடிதத்தில் இக்கருத்தரங்கில் கலந்து கொள்ளும் ஒருவருக்கான பயணச் செலவு மட்டும் WWF (World Wide Fund) அமைப்பால் ஏற்றுக் கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதால், ஆணையாளருக்கான பயணச் செலவினை இம்மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி பெறப்பட்டது. இதற்கான கருத்துரு நகராட்சி நிர்வாக ஆணையாளர் மூலமாக அரசிற்கு அனுப்பிவைக்கப்பட்டது.

தற்போது பார்வை 3ல் காணும் கடிதத்தில் மேற்படி கருத்தரங்கில் ஆணையாளர் அவர்கள் கலந்து கொள்ள ஆகும் செலவினங்களை WWF அமைப்பினரால் ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளதால் இதற்கான கடித வரைவினை அரசிக்கு அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கலாம். ந.க.எண்.109/2011/எம்.சி.6

**மாநகர மன்ற தீர்மானம் எண் 447 நாள் 25.02.2014**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 20**

பொருள் : பணியமைப்பு–கோயம்புத்தூர் மாநகராட்சி – திரு. எஸ். ஜான்சன், உதவிப் பொறியாளர், சென்னை மாநகராட்சி – கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ஒருவழி மாறுதல் கோருதல் – மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பித்தல்– தொடர்பாக.

பார்வை : முதன்மை செயலர்/ஆணையர், சென்னை மாநகராட்சி அவர்களின் கடித ம.அ.8. ந.க.எண். அ1/568/2013, நாள். 10.01.2014.

-----

பார்வையில் காணும் கடிதத்தில் சென்னை மாநகராட்சியில் உதவிப் பொறியாளராக பணிபுரிந்து வரும் திரு. எஸ். ஜான்சன், தனது குடும்ப சூழ்நிலை காரணமாக கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு உதவிப் பொறியாளராக ஒரு வழி பணியிட மாறுதல் கோரி விண்ணப்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து சென்னை மாநகராட்சி மன்ற தீர்மானம் என். 626/2013 நாள். 28.09.2013ல் மேற்படியாரை கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ஒரு வழி பணியிட மாறுதல் செய்ய நியமனக்குழு மூலம் மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு மன்ற தீர்மான நகல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாநகராட்சி பணியமைப்பு விதிகளின்படி, இம்மாநகராட்சிக்கு ஏற்கனவே 36 உதவிப் பொறியாளர்/இளம் பொறியாளர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்டதில் 72 வார்டுகள் 100 வார்டுகளாக அதிகரிக்கப்பட்டதன் காரணமாக நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களால் 19.06.2013ம் தேதியன்று அரசிற்கு அனுப்பப்பட்டுள்ள செயற்குறிப்பில், இம்மாநகராட்சிக்கு 11 உதவி / இளம் பொறியாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இப்பணியிடங்களை அரசு அனுமதிக்கும் பட்சத்தில், அதில் ஒரு உதவிப் பொறியாளர் பணியிடத்தில் திரு. எஸ். ஜான்சன், உதவிப் பொறியாளர், சென்னை மாநகராட்சி அவர்களை ஒரு வழி மாறுதல் மூலம் இம்மாநகராட்சியில் நியமனம் செய்யவும், பணிமூப்பு பட்டியலில் இளையோராக சேர்க்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். மாமன்ற அனுமதிக்குப்பின் மேற்படி தீர்மானத்தை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு அனுப்பி வைக்கலாம்

ந.க.எண்.743/2014எம்.சி.1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 448 நாள் 25.02.2014**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 21

ஆசிய நாடுகளின் நகர்புர வளர்ச்சிக்கு உதவி செய்யும் (CDIA - Cities Development Initiative Asia) நிறுவனத்தை ஜெர்மன் அரசாங்கமும், ஆசிய அபிவிருத்தி வங்கியும் (Asia Development Bank) இணைந்து நடத்துகிறது. கோவை மாநகர வளர்ச்சிக்கான தனது ஆலோசனைகளை வழங்கி, நிதி உதவி செய்ய இந்த அமைப்பு முன் வந்துள்ளது. இதற்கென மேற்படி நிறுவனம் தனது 80% பங்களிப்பான ரூ. 2,53,34,400/–ஐ (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பத்து மூன்று இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து நானூறு மட்டும்) மானியமாக கோவை மாநகராட்சியின் வளர்ச்சி திட்டமிடுதலுக்கு வழங்க உத்தேசித்துள்ளது. இத்தொகையினை கொண்டு, நகர அபிவிருத்தி திட்டம் தயாரித்தல், 24 x 7 திட்டத்திற்கான நிதி பெற உதவி செய்தல், மாநகராட்சி அலுவலர்களுக்கு பயிற்சி அளித்தல் மற்றும் மாநகராட்சியால் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்களான, குப்பையிலிருந்து மின்சாரம் தயாரித்தல் மோனோ ரயில் ஆகிய திட்டங்களின் செயலாக்க வாய்ப்புகள் பற்றிய பரிந்துரை (Feasibility Report ) தயாரித்து வழங்குதல் ஆகிய திட்டங்களை செயல்படுத்த 25.10.2012–ந் தேதிய மாமன்றக் கூட்டத்தின் மாமன்ற தீர்மானம் எண். 259, நாள்: 25.10.2012–ல் மாமன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

தற்சமயம் கோவை மாநகரின் வளர்ச்சிக்கு மிக அத்தியாவசிய தேவையான, போக்குவரத்து நெருக்கடி மிகுந்த சாலைகளில் நெரிசலை சரிசெய்ய முக்கிய திட்டமான **விரைவு பேருந்து போக்குவரத்து முறை (Bus Rapid Transport System)** என்ற திட்டத்தினை செயல்படுத்த மாநகராட்சி நிர்வாகம் உத்தேசித்துள்ளது. எனவே, இந்த திட்டத்திற்கு தேவையான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கவும் மேற்படி போக்குவரத்து திட்டத்தின் செயலாக்க வாய்ப்புகள் பற்றிய பரிந்துரைகளையும் தயாரித்து வழங்க, ஏற்கனவே மாமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட ஆசிய நாடுகளின் நகர்புர வளர்ச்சிக்கு உதவி செய்யும் நிறுவனத்தின் நிதியினை பயன்படுத்திக் கொள்ள மாநகராட்சி உத்தேசிக்கப்பட்டுள்ளதன்படி தேவையான விண்ணப்பங்கள் CDIA நிறுவனத்திற்கு சமர்பிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

மாநகராட்சி வளர்ச்சிக்காக மேற்படி திட்டம் செயல்படுத்த விண்ணப்பங்கள் சமர்பித்து நடவடிக்கை எடுத்தமைக்கு ஒப்புதல் அளிக்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு தெரிவித்தும் CDIA நிறுவனத்தின் நிதி உதவியை பெற தேவையான நடவடிக்கைகள் எடுக்கவும் மற்றும் 20% பங்குத்தொகையான ரூ. 50.67 இலட்சத்தினை மாநகராட்சி நிதியிலிருந்து செலவு மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

அ) நகராட்சி நிர்வாக ஆணையரது ஒப்புதல் பெற்று மேற்படி நிறுவனத்திடம் மாநகராட்சியின் வளர்ச்சித்திட்டங்களில் ஒன்றான விரைவு பேருந்து போக்குவரத்து முறையை (BRTS) செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க தேவையான நிதி உதவி பெற மாநகராட்சி ஆணையர் விண்ணப்பங்கள் சமர்பித்து நடவடிக்கை எடுத்தமைக்கும், தொடர்ந்து மேல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஆ) மாநகராட்சியின் 20% பங்குத்தொகையான ரூ. 50.67 இலட்சத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு மேற்கொள்ளவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந. க. எண். 5799/2012/ஜேஎன்4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 449 நாள் 25.02.2014</u>**

அலுவலகக் குறிப்பு அ மற்றும் ஆ-விற்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது

-----------------------------------------------------------------------------------------------------------------------

## பொருள் எண் 22

மாமன்றத் தீர்மான எண் 204 நாள் 29.12.2011 மற்றும் 382 நாள் 22.02.2013 ஆகியவற்றின்படி பொதுப் பண்டக சாலையிலுள்ள பழைய பொருட்களை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப் புள்ளி மூலமாக விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக பொது பண்டக சாலையிலுள்ள சில பொருட்கள் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப் புள்ளி மூலம் விற்பனை செய்யப்பட்டது. மீதம் உள்ள பொருட்கள் விற்பனை செய்ய 29.01.2014 அன்று செய்திதாளில் விளம்பரம் செய்யப்பட்டது.

தி/ள்.கம்பம் ஸ்டீல்ஸ் நிறுவனத்தினர் மற்றும் திரு. சரவணக்குமார் ஆகியோர் 12.02.2014 அன்று நடைபெற்ற வாய்மொழி ஏலத்தில் கலந்துகொண்டனர். ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் பெறப்படவில்லை. வரிசை எண்கள் 5,8,9 ஆகியவற்றுக்கு ஏலம் கோரபடவில்லை. ஏலம் கோரபட்ட இனங்களுக்கு ஏலதாரர்கள் கோரிய உயர்ந்தபட்ச தொகை விபரம் கீழ் வருமாறு

| அ. எண் | இனம் | அரசு எடையின் பெயர் | அரசு மதிப்பீட்டுத் தொகை ரூ. | உச்சபட்ச ஏல தொகை ரூ. | வித்தியாசம் ரூ. | ஏலதாரர் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| 1. | அல்கோ பேனலிங் சீட்டுகள் | ச.மீ | 120.00 | 95.50 | 24.50 குறைவு | கம்பம் ஸ்டீல்ஸ் |
| 2. | தண்ணீர் லாரி டேங்க் மற்றும் கழிவுநீர் லாரி டேங்குகள் | கிலோ | 28.00 | 28.20 | 0.20 அதிகம் | கம்பம் ஸ்டீல்ஸ் |
| 3 | உபயோகமற்ற ஆட்டோ மொபைல் உதிரி பாகங்கள் உபயோகமற்ற குடிநீர் உதிரி பாகங்கள், பேட்டரி யு.பி.எஸ் போன்ற உபயோகமற்ற இதர பொதுவான பொருட்கள் | கிலோ | 68.00 | 34.20 | 33.80 குறைவு | கம்பம் ஸ்டீல்ஸ் |
| 4. | இரும்பு கிரில், ஏங்கில், டிரஸ்,குப்பை வண்டிகள் போன்ற இரும்பு பொருட்கள் | கிலோ | 36.00 | 30.00 | 6.00 குறைவு | கம்பம் ஸ்டீல்ஸ் |
| 5. | அலுவலக கட்டிடத்தில் இருந்து கழிக்கப்பட்ட ஜன்னல்,கதவு போன்ற மரச்சாமான்கள் போன்றவை | சதுர மீட்டர் | 160.00 | ஏலம் கோரப்படவில்லை | | |
| 6 | மருத்துவமனை மற்றும் பள்ளிகளிலிருந்து பெறப்பட்ட டெஸ்க் மற்றும் இதர பொருட்கள் | கிலோ | 28.00 | 28.15 | 0.15 அதிகம் | கம்பம் ஸ்டீல்ஸ் |
| 7 | ஆழ்குழாய் மோட்டார் பம்ப்செட் | ஒன்று | 4800.00 | 4805.00 | 5.00 அதிகம் | கம்பம் ஸ்டீல்ஸ் |
| 8. | பேனல் போர்டு | ஒன்று | | ஏலம் கோரப்படவில்லை | | |
| 9. | வெப் கேமிரா தொடு திரைசெட், இ.சி.எஸ்.டேக்ஸ் கலெக்சன் இயந்திரம் எண்ணிக்கை | ஒட்டு மொத்த மாக | | ஏலம் கோரப்படவில்லை | | |
| 10 | பழைய தொலை பேசிகள் | ஒன்று | 40.00 | 41.00 | 1.00 அதிகம் | கம்பம் ஸ்டீல்ஸ் |
| 11 | பழைய பேக்ஸ் இயந்திரம் வ.எண் 45-400-0227 ஏ.சி/220 வ 50 | ஒன்று | 400.00 | 400.00 | அரசு விலை | கம்பம் ஸ்டீல்ஸ் |
| 12. | தட்டச்சு இயந்திரம் | ஒன்று | 400.00 | 400.00 | அரசு விலை | கம்பம் ஸ்டீல்ஸ் |
| 13. | பழைய தொலைக்காட்சி போர்ட்டபிள் மாடல் TCL DN 14 N 23 G உடன் தொலைக்காட்சியை இயக்கும் கருவி 1 எண்ணிக்கை | ஒன்று | 2000.00 | 1000.00 | 1000.00 குறைவு | கம்பம் ஸ்டீல்ஸ் |
| 14 | கணினி உடன் கூடிய பொருட்கள் - 1 எண்ணிக்கை | ஒன்று | 4000.00 | 1000.00 | 3000.00 குறைவு | கம்பம் ஸ்டீல்ஸ் |

மேற்காண் பட்டியலின்படி 2,6,7 மற்றும் 10 ஆகிய இனங்கள் அரசு நிர்ணயித்த விலைக்கு அதிகமாக ஏலம் கோரபட்டுள்ளது. மேலும் 11 மற்றும் 12 இனங்கள் அரசு நிர்ணயித்த விலைக்கு ஏலம் கோரபட்டுள்ளது. 1,3,4,13 மற்றும் 14 ஆகிய இனங்கள் அரசு நிர்ணயித்த விலைக்கு குறைவாக ஏலம் கோரபட்டுள்ளது.

ஏற்கனவே 12.12.2012, 10.7.2013 மற்றும் 18.12.2013ஆகிய தேதிகளில் ஏலம் விடபட்டும் மேற்காண் இனங்கள் விலை அதிகம் என யாரும் ஏலம் கோர முன்வரவில்லை. எனவே மேற்கொண்டு உபயோகமற்ற பழைய பொருட்கள் வீணாகாமல் போகவும் மாநகராட்சிக்கு வருவாய் சேர்க்கவும் மற்றும் இடத்தை சுத்தம் செய்து பாதுகாத்து கொள்ளவும் தற்பொழுது மேற்படி பொருட்கள் வைக்கபட்டுள்ள இடத்தில் கட்டுமான பணிகள் துவங்க இருப்பதாலும், இம்முறை ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் விலை அதிகம் என தெரிவித்ததாலும், மேற்காண் பட்டியலில் ஏலதாரர்கள் கோரியுள்ள தொகையினை ஏற்று பொருட்களை வழங்குவது தொடர்பாக மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு - மாமன்றத்தின் முடிவிற்கு ந.க.எண்.10617/2013/எம்.டி.3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 450 நாள் 25.02.2014**

பொருளை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 23

| | |
|---|---|
| பொருள் : | கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.71-ல் காமராஜர் சாலையில் - மாநகராட்சி வணிக வளாக கடைகள் - தரைதளத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள கடைகளை மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்வது - தொடர்பாக. |
| பார்வை | ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.20.02.2014. |

**********

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.71-ல் காமராஜர் சாலையில் மாநகராட்சி வணிக வளாக கடைகள் தரைதளத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள இரண்டு கடைகளை மின் ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி மூலம் ஒதுக்கீடு செய்ய ஏலம் கோரப்படவேண்டும். பொதுப் பணித்துறை வாடகை மதிப்பின்படி வாடகை நிர்ணயம் செய்திட பொறியாளரின் அறிக்கை கோரப்பட்டு கீழ்கண்டவாறு பொதுப்பணித்துறை வாடகை மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வணிக வளாகம் அமைந்துள்ள இடம் | மொத்த கடைகள் | கடை ஒன்றிக்கு மொத்த சதுரடி | ஒரு சதுரடிக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ | மாத வாடகை ரூ |
|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.71-ல் காமராஜர் சாலையில் மாநகராடசி வணிக வளாகத்தில் தரை தளத்தில் கடை எண். 1 | 1 | 88..00 | 75.25/- | 6,622/- |
| 2 | வார்டு எண்.71-ல் காமராஜர் சாலையில் மாநகராடசி வணிக வளாகத்தில் தரை தளத்தில் கடை எண். 2 | 1 | 88..00 | 75.25/- | 6,622/- |

மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்ய கீழ்கண்டவாறு காப்புத் தொகை, வைப்புத்தொகை,சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லது வங்கி உறுதி சான்றிதழ் மற்றும் சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லாமல் அதற்கு செலுத்த வேண்டிய தொகை நிர்ணயம் செய்யவும் அதற்கான விளம்பர செலவினங்களை ஏற்கவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பொது ஏலத்திற்கு சேர்த்துக்கொள்ளப்பட்டதற்கு பின்னேற்பு வேண்டி மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| வைப்புத்தொகை (கடை எண்.1 மற்றும் 2) | -ரூ.75,000/- |
| காப்புத்தொகை | -ரூ.50,000/- |
| சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லது வங்கி உறுதி சான்றிதழ் | -ரூ.3,00,000/- |
| சொத்து மதிப்பீடு சான்றிதழுக்கு பதிலாக செலுத்த வேண்டிய தொகை | -ரூ1,00,000/- |

அலுவலக குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 1478/2014/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 451 நாள் 25.02.2014**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

## பொருள் எண் 24

கோயம்புத்தூர் மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பயோ மீத்தேன் நிலையம் அமைப்பதற்கு கீழ்க்கண்ட

1) டி.கே.மார்க்கெட், டவுன்ஹால் (சுமார் 15 TPD)
2) துடியலூர் மார்க்கெட் (சுமார் 3 TPD)
3) ஊழவர் சந்தை, சிங்காநல்லூர் (சுமார் 3 TPD)
4) அண்ணா மார்க்கெட், மேட்டுப்பாளையம் ரோடு (சுமார் 3 TPD)
5) எம்.ஜி.ஆர். மார்க்கெட், மேட்டுப்பாளையம் ரோடு (சுமார் 3 TPD)
6) பூ / பழங்கள் / ஆடு, மாடு அறுவை நிலையம் மற்றும் உணவு கழிவுகள் அமைந்துள்ள வெவ்வேறு இடங்கள்

ஆகிய இடங்களில் சேகரமாகும் திடக்கழிவுகளைக் கொண்டு பாபா அணு ஆராய்ச்சி மையம், டிராம்பே, மும்பை என்ற இந்திய அரசு நிறுவனத்தின் மூலம் சாத்திய கூறுகளை ஆராய்ந்து பயோ மீத்தேன் பிளான்ட் (Plant for Biomethanation) அமைத்தலுக்கு பாபா அணு ஆராய்ச்சி மையம் மூலம் திட்ட அறிக்கை தயாரித்து அமுல்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 2684/13/MD2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 452 நாள் 25.02.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 25

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – திடகழிவு மேலாண்மை-சூன்யா திட்டத்தின் கீழ் தற்போது வரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மாமன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

******

சூன்யா திட்டத்தின் கீழ் தற்போது வரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மாமன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. சூன்யா திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கைகள்.

- Stakeholders குழு அமைக்கப்பட்டு கோயம்புத்தூர் மாநகராட்சி அலுவலர்கள் டில்லி மற்றும் டாக்காவில் நடைபெற்ற சூன்யா திட்ட கருத்தரங்கு மற்றும் பயிற்சியில் கலந்து கொண்டார்கள்.

- வார்டு எண் - 23 முன் மாதிரி வார்டாக தேர்வு செய்யப்பட்டு மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை பிரித்து சேகரம் செய்ய பொதுமக்களுக்கு பிளாஸ்டிக் டப்பா மற்றும் பை வழங்கப்பட்டது.
- வார்டு எண் - 23 ல் சேகரிக்கப்படும் மக்காத குப்பைகளை ITC நிறுவனத்திற்கு கிலோ ரூ.3/- வழங்கப்பட்டு வருகிறது. 23 துப்புரவு பணியாளர்களால் சேரிக்கப்படும் மக்காத குப்பைகளின் அளவிற்கு தகுந்தவாறு ITC நிறுவனம் நேரடியாக துப்புரவு பணியாளர்களின் வங்கி கணக்கில் செலுத்தி வருகிறது. 02.10.2013 முதல் 24.02.2014 வரை 31332 கிலோ மக்காத குப்பை சேகரிக்கப்பட்டு,31.01.2014 முடிய ரூ.75,348/-பணியாளர்களின் வங்கி கணக்கில் ITC நிறுவனத்தால் செலுத்தப்பட்டுள்ளது.
- தஞ்சாவூா் பாரதி கிராமிய கலை குழு மூலம் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை பிரிக்கும் முறை மற்றும் பயன்கள் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.
- வார்டு எண் - 23 ல் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை சரியாக தரம் பிரித்து மாநகராட்சியின் திட்டத்திற்கு ஒத்துழைப்பு அளித்த பொதுமக்களுக்கு வணக்கத்திற்குரிய கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் மற்றும் ஆணையாளர் அவர்களால் சான்றிதழ் மற்றும் பொன்னாடை வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.
- வார்டு எண் - 23 ல் முதல் கட்டமாக, பாஸ்யகாரலு சாலையில் சேகரிக்கப்படும் மக்கும் குப்பைகளை கொண்டு உரம் தயாரிக்க உரபூங்கா அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.
- வீட்டிலேயே உரம் தயாரிக்கும் முறையை ஊக்கப்படுத்த முதல் கட்டமாக 10 வீடுகள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு உரம் தயாரிக்க பயிற்சி மற்றும் தேவையான மண்பாண்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- வார்டு எண் - 23 ல் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை சரியாக தரம் பிரித்து சிறப்பாக செயல்பட்ட 10 துப்புரவு பணியாளர்களுக்கு தலா அரை பவுன் தங்க நாணயமும், 20 பணியாளர்களுக்கு அயன் பாக்ஸ்மும், 60 பணியாளர்களுக்கு பிளாஸ்க்கும் வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் ஆணையாளர் அவர்களால் வழங்கப்பட்டது.
- சிம்லாவில் சூன்யா திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்களை அறிந்து கொள்ளவும் மற்றும் பயிற்சிகாகவும் மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் 5 துப்புரவு பணியாளர்கள் சூன்யா திட்டத்தின் கீழ் சிம்லா சென்று வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்: 2006/2011/MD' man

**மாநகர மன்ற தீர்மானம் எண் 453 நாள் 25.02.2014**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 26**

பொருள் :- கோயம்புத்தூர் மாநகராட்சி – தற்போது உள்ள பழைய 60 வார்டு பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள தெருவிளக்குகளில் பழுதடைந்து மாற்றப்பட வேண்டிய நிலையில் உள்ள சோடியம் ஆவி விளக்குகள் மற்றும் குழல் விளக்குகளுக்கு பதிலாக புதிய LED விளக்குகள் மாற்றியமைக்க நிர்வாக அனுமதி வேண்டுதல் தொடர்பாக

---------

கோயம்புத்தூர் மாநகராட்சி தற்போது உள்ள பழைய 60 வார்டு பகுதிகளில் சோடியம் ஆவி விளக்குகள் மற்றும் குழல் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. தெருவிளக்குகள் அமைத்து சுமார் 15 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. மேற்படி பழைமையான தெருவிளக்குகள் பழுதடைந்து மாற்றப்பட வேண்டிய நிலையில் உள்ளது. மேலும் இவ்விளக்குகளில் ஏற்படும் சிறு சிறு பழுதுகள் மட்டும் அவ்வப்போது சரி செய்யப்பட்டு வருகிறது. இவ்விளக்குகளில் பழுதுகள் காரணமாக மாற்றக்கூடிய உள்ள விளக்குகளுக்கு பதிலாக தேவையான வாட்ஸ்களுடன் புதிய LED விளக்குகள் உபகரணங்களுடன் மாற்றவும், இந்த மாற்று விளக்குகளுக்கு உரிய விலைப்புள்ளிகள் மற்றும் நிறுவனங்கள் தற்போது இம் மாநகராட்சியில் இல்லாதால் சென்னை மற்றும் மதுரை மாநகராட்சிகளில் கொள் முதல் செய்யப்பட்ட விலை விகிதங்களுக்கு ஏற்ப கோயம்புத்தூர் மாநகராட்சியில் தேவைக்கு ஏற்ப கொள்முதல் செய்து பொருத்துவது குறித்து மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: மாமன்றத்தின் முடிவிற்கு ந.க.எண்.1466/2014/எம்.டி.3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 454 நாள் 25.02.2014</u>**

பொருள் அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 27**

**பொருள்:** கோயம்புத்தூர் மாநகராட்சி – நகரமைப்பு – வடக்கு மண்டலம் வார்டு எண்.41க்கு உட்பட்ட பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் அமைக்கப்பட்ட காந்திமாநகர் மனைப்பிரிவில் சமுதாய கூடம் மற்றும் இடத்தினை கிரயம் பெறும் வரை வாடகை செலுத்துவதற்கும், மாநகராட்சி பராமரிப்பதற்கும் அரசுக்கு பிரேரணை அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பித்தல் – தொடர்பாக.

**பார்வை:** மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அவர்களின் வாரிய விரைவு குறிப்பாணை எண்.வா.வா.பி7/00344/13, நாள்.07.02.2014.

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம் வார்டு எண்.41க்கு உட்பட்ட பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கணபதி கிராமம், க.ச.எண்கள்.26,27,28 பாகம், 29-39, 48,49, 50, 52, 53, 54, 55/2பி மற்றும் 40/2, 43/2, 45,46,47 ல் அமைக்கப்பட்ட காந்திமாநகர் பேஸ்- I, II மற்றும் III மனைப்பிரிவில் உள்ள சமுதாய கூடம் மற்றும் இடத்தினை நிலக்கிரய தொகை ரூ.5,13,38,000/- தொகை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு செலுத்தி மாநகராட்சி பெயரில் நிலக்கிரயம் செய்யவும் அதற்கான பிரேரணை அரசுக்கு அனுப்பவும் மாமன்ற தீர்மானம் எண்.289. நாள்.14.11.2013 நிறைவேற்றப்பட்டு அரசுக்கு 20.12.2013ல் பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில் பார்வையில் காண் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய விரைவு குறிப்பாணையில் மேற்படி இடத்தினை கிரயம் பெறும் வரை ரூ.1,36,250/– வாடகை தொகையினை வீட்டு வசதி வாரியத்திற்கு செலுத்தி மாநகராட்சி பராமரிப்பில் எடுத்துக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, ரூ.5,13,38,000/– நிலக் கிரயத் தொகை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு செலுத்த அரசிடமிருந்து நிர்வாக ஒப்புதல் வரும் வரை மாத வாடகையாக ரூ.1,36,250/– தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு செலுத்தவும், இடத்தினை மாநகராட்சி பராமரிப்பிற்கும், உபயோகத்திற்கும் எடுத்துக் கொள்ளவும் அரசுக்கு பிரேரணை அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- ஒப்புதல் வழங்கலாம். ந.க.எண்.620 /2012/எம்.எச்.5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 455 நாள் 25.02.2014</u>**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

## பொருள் எண் 28

**பொருள்** : மண்டபம் - கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - வார்டு எண் 67 – மாநகராட்சி மருதூர் திருமண மண்டபம் பராமரிப்பு - சுயஉதவிக்குழுவிற்கு ஒப்படைப்பு செய்ய அனுமதி வழங்குதல் - தொடர்பாக.

**பார்வை** : ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள் 08.02.2014.

-------------------

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் 67-வது வார்டில் உள்ள மருதூர் திருமண மண்டபம் மாநகராட்சி பராமரிப்பில் உள்ளது. மேற்படி மண்டபத்திற்கு 2012-2013-ம் ஆண்டு வருவாய் ரூ.1,65,000/-ம், 2013-2014-ம் ஆண்டிற்கு ரூ.24,000/-மும் வருவாயாக கிடைக்கப்பெற்றுள்ளது. மேற்படி திருமண மண்டபத்தின் பராமரிப்பிற்கு ஆண்டொன்றுக்கு ரூ.3,50,000/- செலவு செய்யப்பட்டு வருகிறது. இம்மண்டபத்தின் மூலம் கிடைக்கப்பெறும் வருவாயை விட பராமரிப்பு செலவு கூடுதலாக உள்ளது. எனவே மருதூர் திருமண மண்டபத்தை பொதுமக்கள் பயனடையும் பொருட்டு அப்பகுதியிலுள்ள சுயஉதவிக்குழுக்கள் மட்டும் கலந்து கொள்ளும் பொருட்டு ஏல நிபந்தனைகள் அடிப்படையில் ஏலம் விடுவதற்கு கீழ்க்கண்டுள்ளவாறு ஏல வைப்புத் தொகைகளை நிர்ணயம் செய்யலாம்.

| வைப்புத் தொகை ரூ. | காப்புத் தொகை ரூ. | சொத்து மதிப்பு சான்றிதழ் அல்லது வங்கி உறுதிச்சான்றிதழ் ரூ. | சொத்து மதிப்பு சான்றிதழ் அல்லாமல் அதற்கு பதிலாக செலுத்த வேண்டிய தொகை ரூ. |
|---|---|---|---|
| 50,000/- | 50,000/- | 2,00,000/- | 50,000/- |

மேற்படி வைப்புத் தொகைகளை நிர்ணயம் செய்ய அவசர அவசியம் கருதி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் முன் அனுமதி பெற்று மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண் 15875 /2013/கி அ11

**மாநகர மன்ற தீர்மானம் எண் 456 நாள் 25.02.2014**

அனுமதிக்கப்பட்டது

---

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி